# ஈரான் - ஸ்ரீலங்கா உறவுகள்: ஒரு வரலாற்றுப் பார்வை

**ஜலால்தீன், எம்.எஸ்.எம்.**

உலக வரலாற்றில் பல்வேறு முத்திரைகளைப் பதித்து அழியா இடம் பெற்ற சாம்ராஜ்யங்களில் பாரசீக சாம்ராஜ்யமும் ஒன்றாகும். பாரசீக சாம்ராஜ்யத்துக்கு 3000 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுப் பாரம்பரியம் இருப்பது போலவே, இலங்கையுடனான இதன் தொடர்புகளுக்கும் 3000 வருட வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. இலங்கை உலக அரங்கில் மிகப் பூர்வீக காலம் தொட்டு பல்வேறு நாடுகளுடனும் சாம்ராஜ்யங்களுடனும் நாகரீகங்களுடனும் வரலாற்றுத் தொடர்பு கொண்டிருப்பதற்கு அதன் புவியியல் ரீதியான கேந்திர அமைப்பே முக்கிய காரணமாகும்.

இன்றைய இலங்கை நாடு ஒரு தீவாக நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பினும் புவியியல் ஆய்வாளரின் கூற்றுப்படி ஆதியில் மிகப்பரந்த ஒரு நிலப்பரப்பின் ஒரு பகுதியாக இருந்தது. இலங்கைக்குத் தெற்கே இந்துமா கடலிருக்கும் பிரதேசம் கடலாகவன்றி நிலப்பிரதேசமாக இருந்ததென்பதையும் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, கிழக்கிந்தியத்தீவுகள் யாவும் நீரால் பிரிக்கப்படாமல் ஒரே நிலப்பிரதேசமாக இணைந்திருந்ததென்பதையும் இப்பிரதேசமே ''லெமூரியாக் கண்டம்'' எனவும் பின்பு ''குமரிக் கண்டம்'' எனவும்அழைக்கப்பட்டதையும் அறிய முடிகின்றது. இக்கண்டத்திலேயே முதல் மனித இனம் தோன்றி இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இக்கண்டம் திராவிட நாகரீகத்தின் உறைவிடமாக இருந்தது மட்டுமன்றி, சிந்து நதிப்பள்ளத்தாக்கில் ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் பிரதிபலனாக ஏற்பட்டுள்ள முடிவின்படி, அவ்விடங்களும் திராவிட நாகரீகத்துக்குட்பட்டஇடமாகக் கருதப்படுவதனால் இந்தியக்கண்டம் முழுவதுமே இந்நாகரிகத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது என்பது புலனாகின்றது.

''மூன்றுக்கு மேற்பட்ட கடற்கோள்களின் காரணமாக தென் நிலப்பகுதி கடல் வயப்பட்டு சிற் சில தீவுகளே எஞ்சின. தென்பகுதி கடலினுள் அமிழ்ந்தபோது வட கடலிலுள்ள இமயப்பகுதி உயர்ந்தது'' என்பது நில வல்லுணர்களின் கூற்றாகும். தென் நிலப்பகுதி கடலால் விழுங்கப்பட்டபோது, அங்கு வாழ்ந்த மக்கள் படிப்படியாக வடக்கு நோக்கி நகர்ந்தனர். இதனாலேயே தென்னிந்தியாவினின்றும் இலங்கை பிரிந்து தனித் தீவாக ஆகியது. கிரேக்க அறிஞர் ''மெகஸ்தன்ஸ்'' என்பவர் இலங்கையை ''தபிரபேன்' எனக் குறிப்பிடுவதுடன் அது இந்தியாவினின்றும் ஒரு ஆற்றினால் பிரிக்கப்பட்டுள்ளது எனவும் கூறுகின்றார். இதிலிருந்து 'தாமிர வருணி' அல்லது 'பொருனை ஆறு' இன்று கடலில் மூழ்கியுள்ள நிலத்தினூடாக அல்லது இலங்கையினூடாக பாய்ந்துள்ள ஆறுகளில் ஒன்றெனக் கூறலாம். (Sajahan, ANM., 1992)

**உலக அரங்கில் இலங்கையின் தனித்துவம்**

இலங்கையின் புவியியல் அமைப்பும் அதன் கேந்திரத் தன்மையுமே உலக அரங்கில் இலங்கையின் தனித்துவமான செல்வாக்கிற்கும் காரணிகளாகத் திகழ்கின்றன. இலங்கை இயற்கையாகவே ஆபிரிக்கா, இந்தியா, சீனா போன்ற உலகின் மிக முக்கிய நாடுகளின் மையப் பகுதியில் - மத்திய நிலையமாக - திகழ்வதும் வரலாற்றின் ஆரம்ப காலத்திலிருந்து உலக வர்த்தக நடவடிக்கைகளின் பிரபலமான கேந்திர நிலையமாக விளங்கி வருவதும் இதன் தனித்துவத் தன்மைக்கு மெருகூட்டியது. அது மட்டுமன்றி இந்நாட்டில் வாசனைத்திரவியமும், மாணிக்கக் கற்களும், யானைத்தந்தமும், முத்தும் இயற்கையாகக் காணப்பட்டமையால் உலகின் பல்வேறு நாட்டவரையும் அது கவர்ந்தது. இதன் காரணமாகவே இலங்கை அராபிய உலகில் மிகப்புராதன காலம் தொட்டே ''ஜஸீரதுல் யாகூத்'' (மாணிக்கத்தீவு) என அழைக்கப்பட்டு வந்தது. (Ahmad Nafis, 1940)

அராபிய தீபகற்பம் மூன்று பகுதிகளாலும் கடலால் சூழப்பட்டிருப்பதால் கடல் வியாபார நடவடிக்கைகளுக்கு பெரும் உந்து சக்தியாகத் திகழ்ந்தது என்று கூறலாம். இஸ்லாத்துக்கு முந்திய ஜாஹிலிய கால கவிதைகளில் அராபிய உலகின் வியாபார நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகளை நாம் காணலாம். அராபிய உலகிற்கும் சீனத் தேசத்திற்கும் இடையிலான கடல் வழி மையமாக இலங்கை அமைந்திருப்பது மட்டுமன்றி கிழக்குலகிற்கும் மேற்குலகிற்கும் இடையிலான கடல் வழி மையமாக இலங்கை

அமைந்திருப்பதும் ஒரு முக்கியமான விடயமாகும். இதன் காரணமாகவே அரபிகள், பாரசீகர்கள் ஐரோப்பிய உலகிற்கும் ஆசியாக்கண்டத்திற்கும் வியாபார நடவடிக்கைகளை இலங்கையினூடாக மேற்கொண்டார்கள். இந்திய இலங்கை துறை முகங்களிலிருந்து புறப்பட்ட அவர்களது கப்பல்கள் மேற்கு எமனை (West Yemen) சென்றடைந்தன. அங்கிருந்து அராபியர்கள் பாலைவனப் பிரயாணத்தின் மூலமாக ஹிஜாஸ் வழியாக வட, தென் பிரதேசங்களுக்கும் எகிப்துக்கும் சென்றார்கள். (Shukri, M.A.M, 1986)

ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இஸ்லாத்தின் புத்தெழுச்சியின் பின் கலீபாக்களின் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவடைந்ததைத் தொடர்ந்து அராபியர்களின் வர்த்தக நடவடிக்கைகள் புதுத்தெம்பு பெற்றன. முஸ்லிம்களின் வியாபார நடவடிக்கைகள் இந்து சமுத்திரத்தினூடாக இலங்கையிலும் அதிகரித்தது. இலங்கையில் நீண்ட காலம் தரிக்கவும் இந்நாட்டு மக்களுடன் திருமண உறவுகளைக் கட்டி எழுப்பவும் வேண்டியேற்பட்டது. ஆறு மாதங்கள் தொடர்ந்து வீசும் பருவப் பெயர்ச்சிக் காற்றும் (Monsoon) இவ்வாறு மாதங்களும் இலங்கை அல்லது இந்தியாவில் தரித்திருக்க வேண்டிய கட்டாய நிலையை ஏற்படுத்தியது.

இஸ்லாம் அரேபியாவில் தோன்றுவதற்கு முன்னரே அரேபிய வளைகுடா நாட்டிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் வந்த மக்கள் கீழைத்தேய நாடுகளுடன் தொடர்புகளை வைத்திருந்தார்கள். இஸ்லாத்தின் தோற்றம் அந்நாட்டு மக்களுக்கு ஒரு புது உத்வேகத்தை அளித்தது. மேற்குக் கரையோரப் பகுதிகளுக்கும் இவர்கள் வந்தார்கள். மலாயா, சுமாத்திரா, ஜாவா பகுதிகளிலும் இஸ்லாம் பரவிய பிறகு இவர்களுக்குக் கிழக்குக்கரையோரப் பகுதிகளுடன் இருந்த தொடர்பு அதிகரித்தது.

**இலங்கை ஈரானிய உறவுகளின் பூர்வீகத்தன்மை**

இன்றைய ஈரானிய நாடு வரலாற்று ஏடுகளில் பாரசீகம் (Persia) என அழைக்கப்படுகின்றது. உலகின் மாபெரும் நிலப்பரப்புக்களை நீண்டகாலம் ஆட்சி செய்த சாம்ராஜ்யங்களில் ஒன்றாக பாரசீக சாம்ராஜ்யம் விளங்குகின்றது. 1,648,000 சதுர கிலோ மீற்றர் (636.128 சதுர மைல்) நிலப்பரப்பைக் கொண்ட இன்றைய ஈரானிய இஸ்லாமிய குடியரசு, 75 மில்லியன் மக்கள் தொகையைக்கொண்டதாகும். ஈரான் நாட்டின் ஆதிக்குடி மக்கள் ஆரிய இனத்தைச் சேர்ந்த, தென் ரஷ்யாவிலிருந்து கிறிஸ்துவுக்கு 2000 வருடங்களுக்கு முன் குடியேறியவர்கள் எனக் கருதப்படுகின்றது.

பாரசீகர்களின் முதலாவது பெரிய சாம்ராஜ்யம் கி.மு 550இல் சைரஸ் (Cyrus) என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இவர்கள் பபிலோனியப் பிரதேசம் உட்பட ஆசியா மைனரில் அநேக நாடுகளை வெற்றி கொண்டனர். இவர்களின் ஆட்சிப்பரம்பல் ஆப்கானிஸ்தான் வரை வியாபித்திருந்தது. கி.பி. 224இல் பிரபல்யமான சாசானிய பாரசீக அரசு (SASSANIAN PERSIAN EMPIRE) உலகின் மிக முக்கிய மூன்று சாம்ராஜ்யங்களில் ஒன்றாக விளங்கியது. 1588-1629இல் இந்நாட்டுக் கலைகளும் கட்டிடக்கலைகளும் சிறப்புற்று விளங்கின. அரேபியாவில் இஸ்லாத்தின் தோற்றத்துடனேயே பாரசீக மக்களாலும் உடனடியாக அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அராபிய மக்களுடன் இணைந்து ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை தழுவிய மக்களாக பாரசீக மக்கள் கருதப்படுகின்றனர். இவர்கள் மூலமே இவர்கள் மேற்கொண்ட வர்த்தகப் பிரயாணங்களினால் இந்து சமுத்திரத்தினூடாக இஸ்லாமும் எடுத்துச் செல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து கிழக்கு ஆபிரிக்க வர்த்தகர்களும் கடற்பிரயாணத்தின் மூலம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்களோடு சில இந்தோனேசிய மக்களும் இஸ்லாத்தின் குடையின் கீழ் ஒன்றிணைந்தனர். இதன் மூலம் இஸ்லாத்தின் அறிமுக காலத்திலிருந்தே அரேபியரோ பாரசீகரோ வேறு எவருமே இந்திய சமுத்திர வியாபார நடவடிக்கைகளில் புதியவர்களாக அறிமுகப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்லாம் பரவியதன் மூலமாக முஸ்லிம் வர்த்தகர்கள் என்ற அடையாளத்தால் அவர்கள் அங்கீகரிக்கப்பட்டு கிழக்கு மேற்கு உறவுக்கு ஒரு மாபெரும் பாலமாக – சக்தியாகத் திகழ்ந்தார்கள். (Kiribamuna, S., 1986)

இலங்கையுடன் மட்டுமன்றி ஆசிய நாடுகளுடன் பாரசீகம் கொண்டிருந்த வர்த்தக கலாசார தொடர்புகள் கிறிஸ்துவுக்கு முன் மூன்றாவது மிலேனிய ஆண்டுகள் கொண்டதாக வரலாற்று ஆசிரியர்களால் கருதப்படுகின்றது:

> "The maritime trade of the Indian Ocean can be traced back to the dawn of civilization when as early as the third millennium B.C the Harappa merchants of India traded with Mesopotamia through the ports of the Persian Gulf"

> "இந்து சமுத்திரத்தில் இடம் பெற்ற கடற்பிரயாண வர்த்தக நடவடிக்கைகளில் கிறிஸ்துவுக்கு முன் மூன்றாவது மிலேனிய ஆண்டுகள் வரலாற்று பாரம்பரியம் உடையதாக, நாகரீகங்களின் தோற்றத்துடன் கூடியதாகக் கருதப்படுகின்றது. இக்காலப்பகுதியில்தான் இந்தியாவின் 'ஹரப்பா' நாகரீக வர்த்தகர்கள் பாரசீக வளைகுடாவினூடாக மொசபத்தேமியாவுடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்" (Shreen Ratnagar, 1982)

பாரசீகத்தில் கி.மு 500 வருடங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட பெரும் அரசாக ஆச்சாமெனியன் (Achaemenid empire) சாம்ராஜ்யம் கருதப்படுகின்றது. இவ்வரச பரம்பரையினர் என கி.மு 553 – 330 ஆண்டு காலப்பகுதிகளில் ஆட்சி செய்த 'சைரஸ்'(Cyrus I) என்பவரிலிருந்து டாரியஸ் III (Darius III) என்பவர் வரை ஆட்சி செய்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது. இவர்களின் ஆட்சிக்காலத்தில் மேற்காசியா, எகிப்து உட்பட பல நாடுகள் இவர்களின் ஆதிக்கத்தில் இருந்தது மட்டுமன்றி பல்வேறு ஆசிய அபிரிக்க நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

> "The establishment of the Achaemenid empire of the Persians in the sixth century B.C. brought the whole of west Asia and Egypt under its control. Attempts at utilizing maritime routs for trade purposes during this time involved the active participation of the experienced Arab seafarers"

> "கி.மு. ஆறாம் நூற்றாண்டிலே பாரசீகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஆச்சாமெனியன் சாம்ராஜ்யம் (Achaemenid empire) மேற்காசியாவையும் எகிப்தையும் அதன் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்திருந்தது. இக்காலப்பகுதியில் கடல் பிரயாணப் பாதைகளை வியாபார நோக்கங்களுக்கு பயன்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், மிக அனுபவம் பெற்றிருந்த அரபுலக கடல் வர்த்தகர்களின் பங்களிப்பை இணைத்துக் கொண்டிருந்தது." (Hourani, GF., 1951)

இக்கூற்றின் மூலம் அரேபியர்கள் கிழக்குலகுடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த சம காலத்திலேயே பாரசீகர்களும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை புலனாகின்றது. அரபுலக வர்த்தகக் கப்பல்களும் பாரசீக வர்த்தகக் கப்பல்களும் தென்னிந்திய இயற்கைத் துறைமுகங்களுக்கு அடிக்கடி வந்து சென்ற வண்ணமிருந்தன. இவர்களின் இலங்கையுடனான தொடர்பு பற்றிக் கூறும் பௌத்த மக்களின் புராதன வரலாற்று நூலான மகாவம்சம் இவர்களுக்கு பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தில் விஷேடகுடியேற்றத்திட்டத்தைஏற்படுத்திக்கொடுத்ததாகக்குறிப்பிடுகின்றது. ('Mahavamsa' Geiger, 1950). ஆனால் வேறு சில வரலாற்று ஆய்வாளர்கள் இக்குறிப்பு கிரேக்கர்களைக் குறிப்பிடுவதாக அபிப்பிராயப்படுகின்றனர்.

கி.பி. 3ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பாரசீக சாசானிய அரசின் (SASSANID PERSIAN EMPIRE) தோற்றம், இந்திய சமுத்திர வியாபார நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. கிழக்குலகின் வியாபார நடவடிக்கைகளில் அப்போது மிக மும்முரமாக ஈடுபட்டிருந்த ரோமர்களுக்கும் கொன்தான்துநோபுளுக்கும் இந்திய வியாபார பிரயாணங்களில் பூரணமான ஆதிக்கமும் செல்வாக்கும் அப்போது இருக்கவில்லை. கிழக்குலகின் உணவுப் பொருட்களையும் விஷேடமாக சீனாவின் பட்டுக்களையும் சந்தைப்படுத்துவதில் மிக வளர்ச்சியுற்றிருந்த பாரசீக சாசானிய அரசிற்கு இவர்களால் ஈடு கொடுத்து வியாபாரம் செய்ய முடியவில்லை. "கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கடற் பிரயாண வர்த்தகத்தின் மூலம் பாரசீகர்கள் கிழக்கு மேற்குவியாபாரத்தின்ஏகபோக உரிமையாளர்களாக விளங்கினர். இந்திய சமுத்திரத்தில் அவர்களின்வியாபார நடவடிக்கைகள் அப்போது மிக முக்கியம் பெற்றிருந்தது. பைசாந்திய பேரரசர் ஜஸ்டினியன் (JUSTINIAN கி.பி. 527 – 565) பாரசீகர்களின் ஏகபோக வர்த்த நடவடிக்கைகளை சீர் குலைப்பதற்காக மேற்கொண்ட எதியோப்பிய முற்றுகை முயற்சி தோல்வியில் முடிவுற்றது." (Procopius, 1961)

இக்காலப் பகுதியிலேயே பாரசீக நாட்டு வர்த்தகர்கள் இந்திய, இலங்கை வியாபாரச் சந்தையில் முழுமையாகப் பிரவேசித்திருந்தார்கள். பிரபல வரலாற்றாசிரியர் கொஸ்மஸ் (Cosmos) என்பவரின் கூற்றுப்படி "கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இலங்கை மிக முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத் துறைமுகமாக விளங்கியதுடன், பாரசீகர்கள் இந்நாட்டின் ஏற்றிறக்குமதி வர்த்தகத்தில் மிக முக்கிய பங்கு கொண்டிருந்தனர். அவர்களே இந்நாட்டிற்கு அப்போது கௌரவத்திற்குரிய வியாபாரச் சின்னமாக விளங்கிய குதிரைகளைக் கொண்டு வந்திருந்தனர்". (Cosmos I, 1909) இதற்கு ஆதாரமாக பைசாந்திய ஆட்சியாளரான "ஹெராகுலியஸ்"(Heraclius கி.பி. 613–641) கால நாணயங்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (Codrington) கி.பி. 11ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அரபு வரலாற்றுக் குறிப்புகளின்படி, இலங்கைக்கும் பாரசீக நாட்டு அனசர்வானுக்கும் (ANUSHARVAN கி.பி. 531 – 578 ) இருந்த ராஜதந்திர தொடர்பும் நிரூபிக்கப்பட்டுள்ளது. கி.பி. 10ஆம் நூற்றாண்டின் வரலாற்றாசியர் அல் தபரி (Al-Tabari) அனுசர்வான் இலங்கைக்கு தனது படைகளை அனுப்பி அதைக் கைப்பற்றியதாகக் குறிப்பிடும் தகவல் எமது ஆய்வுக்குரியதாகும். (Imam, SA., 1971)

கி.பி. 4ஆம், 6ஆம் நூற்றாண்டு காலப்பகுதி பொதுவாக அரபு நாட்டு வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்திருந்த காலப்பகுதியாகும். கி.பி. 340 – 378ஆம் ஆண்டுகளில் ஹிமாரிட் அராபிய அரசு (HIMYARIT ARAB KINGDOM) எதியோப்பியாவின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. அவ்வரசை பாரசீக அரசு வெற்றி கொண்டு முஸ்லிம் ஆட்சிப்பரவல் வரை தொடர்ந்து வைத்திருந்தார்கள். (Hourani, GF., 1951) 7ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இஸ்லாத்தின் எழுச்சியோடு அரேபியர் இஸ்லாமிய உலகிலும் குறிப்பாக கீழைத்தேய நாடுகளிலும் அரசியல், சமய ரீதியாகப் பலம் பெற்றனர். மிகக் குறுகிய காலத்திலேயே அராபிய அரசு மேற்காசியாவில் முழுமையாக நிலை கொண்டு அட்லாண்டிக் சமுத்திரத்தை அடையக்கூடியதாக வட ஆபிரிக்காவினூடாக வியாபிக்கத் தொடங்கியது. 8ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட அரபுலகப் பரவலின் ஆரம்ப கால கட்டத்திலேயே ஈரானும் வெற்றி கொள்ளப்பட்டிருந்தது. அரபுலகுக்கு கிடைத்த மாபெரும் வெற்றிகளில் ஒன்றாக ஈரானிய, எகிப்திய வெற்றிகளும் அங்கு இஸ்லாம் மிக இலகுவாகப் பரவியதும் கருதப்படுகின்றது. ஏனெனில் இவ்விரு நாடுகளும் கடற் சமுத்திர பிரயாணங்களிலும் வர்த்தக அனுபவங்களிலும் மிகப்பிரபல்யம் பெற்றிருந்தன. இந்து சமுத்திரத்தின் வியாபார மன்னர்களாகத் திகழ்ந்த பாரசீகத்தினர் அப்போது இஸ்லாமிய வர்த்தக உலகின் முக்கிய பங்காளிகளாக உலகில் வலம் வந்தார்கள். இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, சீனா போன்ற நாடுகளில் காணப்பட்ட துறைமுகங்களில் ஏற்படுத்தப்பட்ட வர்த்தக குடியேற்றங்களில் அரேபிய, பாரசீக, கிழக்கு ஆபிரிக்க நாட்டு முஸ்லிம்கள் தமது வியாபார நடவடிக்களை மேற்கொண்டு வந்தார்கள். 10, 11ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட துருக்கிய இஸ்லாமிய ஆட்சிப்பரவலின் மூலம் இந்தியாவும் முழுமையான இஸ்லாமிய வர்த்தக ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. 12, 14, 15ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவின் முக்கிய குடி மக்களான வங்காளிகளும் குஜராத்திகளும் பெருமளவில் இஸ்லாத்தை தழுவினார்கள். இவர்கள் அனைவரும் 'இஸ்லாம்' என்ற அடையாளத்தின் கீழ் ஒன்றிணைந்தார்கள்.

இயற்கையாக, இலங்கையிலும் இந்தியாவின் கரையோரங்களிலும் அமைந்திருந்த பல்வேறு வசதிகள் உலகின் கிழக்கு மேற்கு வியாபார நடவடிக்கைகளுக்கு இவ்விரு நாடுகளையும் நம்பியிருக்க வேண்டிய நிலையைத் தோற்றுவித்தன. ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக வீசும் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்கு ஈடு கொடுத்து பாரசீக வளைகுடாவிலிருந்து சுமாத்திராவுக்குப் பிரயாணம் செய்வது கஷ்டமாக இருந்த நிலையில், இலங்கை இந்திய கடற்கரைப் பிரதேசங்களில் அமைந்திருந்த வர்த்தக நிலையங்கள், பாதுகாப்பான துறைமுகங்கள், உணவு, தூய்மையான நீர் என்பன கப்பல்கள் இங்கு சில காலம் தரித்திருக்க வேண்டிய கட்டாய நிலையை ஏற்படுத்தி இருந்தன. இஸ்லாத்தின் தோற்றத்தின் பின் பாரசீக முஸ்லிம் வர்த்தகர்களை சீனாவின் முக்கிய துறைமுகமான கெண்டனில் (CANTON) அடிக்கடி காண முடிந்தது.

பாரசீகர்களின் இஸ்லாத்துக்கு முந்திய இலங்கையுடனான வர்த்தகத் தொடர்பும் நடவடிக்கைகளும் இஸ்லாத்தின் எழுச்சியின் பின்பும் தொடர்ந்த வண்ணமிருந்தன. அதிகளவிலான பாரசீக முஸ்லிம்கள் வியாபார நோக்கங்களுக்காக அடிக்கடி இலங்கைக்கு வந்தனர். எவ்வாறெனினும் பாரசீக முஸ்லிம்களும் அவர்களின் அரபுலக நண்பர்களும்

வித்தியாசமான பல்வேறு சீதோஷ்ன காலகட்டங்களில் இந்நாடுகளினூடாக பிரயாணம் மேற்கொண்டார்கள். சீனாவிலிருந்து பட்டுக்களையும் உணவுப் பொருட்களையும் கொள்வனவு செய்யும் பாரசீக, அரபு முஸ்லிம் வர்த்தகர்கள் இலங்கையிலும் இவற்றைச் சந்தைப்படுத்துவதிலும் இலங்கையிலிருந்து கறுவா, பாக்கு, ஏலம் போன்றவற்றை கொள்வனவு செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். பிரபல வரலாற்றுப் பேராசிரியர் R. A. L. H. குணவர்த்தன என்பவரின் அண்மைய ஆய்வின்படி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்குப் பாரசீக அரபு முஸ்லிம்களின் வர்த்தக ரீதியான அனுபவங்களும் தொழிநுட்பங்களும் பெறப்பட்டதாக அறிய முடிகின்றது. ஏனெனில் 'இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கிய நீர்ப்பாசனத்திட்டங்கள் இவ்வர்த்தக நடவடிக்கைகளின் உச்ச கட்டமாக இருந்த ஏழாம் ஒன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே அமைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இதற்காக நீராவியால் இயங்கும் இயந்திர தொழிநுட்பம் (HYDRAULIC ENGINEERING) பயன்படுத்தப்பட்டுள்ளது. (Winsted, 1909)

வரலாற்று ரீதியாக பிரபல்யம் பெற்று விளங்கிய இலங்கையின் மாந்தைத் துறைமுகம் பாரசீக, சாசானிய ஆட்சியின்போது பாரசீக வளைகுடாவுக்கும் இலங்கை இந்திய வர்த்தக தொடர்புகளுக்கும் மிக முக்கியமான துறைமுகமாக விளங்கியது. இதை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு சீன தேசத்து 8ஆம், 11ஆம் நூற்றாண்டு மட்பாண்டங்களும் நாணயங்களும் மாந்தை துறைமுகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு பாரசீகர்களும் அவர்களைத் தொடர்ந்து அரபு நாட்டு மக்களும் வருவதற்கு மிக முக்கிய காரணமாக விளங்கியது, இலங்கையில் யுனயஅ'ள ிநயம எனப்படும் ஆதம் மலையாகும். உலகின் முதல் மனித தந்தையாகக் கருதப்படும் நபி ஆதம் (அலை) இம்மலையிலேயே முதல் முதல் இறக்கப்பட்டதாக நிலவிவரும் நம்பிக்கை, மிகப் புராதன காலம் தொட்டே பல்வேறு நாட்டு மக்களையும் இந்நாட்டின் பக்கம் கவர்ந்திழுப்பதற்கு காரணமாக அமைந்தது எனலாம். 14ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பிரபல புவியியலாளர் இப்னு பதூதாவின் கூற்றுப்படி முதல் முதல் 10ஆம் நூற்றாண்டில் அபூ அப்துல்லாஹ் இப்னு அல் காபிப் என்பவரே இலங்கையின் ஆதம் மலைக்கு விஜயம் செய்து ஆதம் மலை பற்றிய பல்வேறு தகவல்களையும் தந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான வர்த்தக, நாகரீக, கலாசார தொடர்புகள் மிகவும் பழமையானவை மட்டுமன்றி அவை காலத்தால் அழிக்க முடியாதபடி உறுதிப்படுத்தப் பட்டவையாகும். கீழைத்தேய நாடுகளுக்கு வர்த்தக நோக்கமாக கடல் மார்க்க பிரயாணங்களை மேற்கொண்ட கிரேக்கர்கள், உரோமர்கள் போலவே பாரசீகர்களும் மிகப் புராதன காலம் தொட்டே கடல் மார்க்க பிரயாணங்களை மேற்கொண்டு வந்துள்ளனர். இந்து சமுத்திரத்தில் இவர்களின் கப்பல்கள் சீனாவுக்கு செல்லும் வழியில் அடிக்கடி வந்து போய்கொண்டிருந்தன. ஏழாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இஸ்லாத்தின் எழுச்சியின் பின் 'பாரசீகர்' என்ற முத்திரையிலன்றி 'இஸ்லாமியர்' என்ற அடையாளத்துடன் இவர்கள் இலங்கை, இந்திய நாடுகளுடன் தமது தொடர்புகளை தொடர்ந்த வண்ணமிருந்தனர்.

இலங்கையின் வர்த்தகத்தில் மட்டுமன்றி, நாகரீக கலாசார துறைகளிலும் பல்வேறு தொடர்புகளையும் பங்களிப்புகளையும் ஈரானியர்கள் கொண்டிருந்தனர். அந்தத் தொடர்புகளும் பங்களிப்புகளும் இன்றுவரை சிறிதும் மாறா வண்ணம் தொடர்ந்த வண்ணமுள்ளன. கி.மு. 3000 ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கை ஈரான் நட்புறவும் தொடர்புகளும் பணிகளும் கி.பி. 2013ஆம் ஆண்டிலும் நீடித்து செல்வது வரலாற்று சிறப்பம்சம் என்றே கூறலாம்.

**Bibiliography**


1. Ahamed Nafis, 1940, "The Arabs knowledge of Ceylon", **Islamic Culture (19)**, Hyderabad, India.
2. Codington, H.W., 1924, "Ceylon Coins and Currency", **Memories of the Colombo Museum**, Colombo.
3. Dewing, H. B., 1961, **History of the Wars**", (Procopius), Vol. 1, London.
4. Geiger, W. 1950, "**Mahavamsa**", (edit..) P.T.S., Ch. X.
5. Gunawardana, R.A.L.H. 1983, "Total power or shared power: a study of the hydraulic state and its transformation in Sri Lanka from the third to the ninth century A. D", **Seminar for Asian Studies**, University of Peradeniya, Sri Lanka, Paper No: 4.
6. Hourani, G.F., 1951, "**Arab Seafaring"**, Princeton University Press.
7. Imam, S.A., 1971, " Ceylon – Iran Cultural Relationships': **2500$^{th}$ Anniversary of the Monarchy of Iran"** (Brochure issued by the national cominitee of Ceylon),
8. Sajahan, A.N.M., 1992, **"Puttalam – History and Traditions"** (Tamil)
9. Shareen Ratnagar, **"Ecounters; the Westerly trade of the Harappan civilization"**, Oxport University Press.
10. Shukri, M.A.M., 1986, "Muslims of Sri Lanka – A cultural Perspective" **Muslims of Sri Lanka,** Jamiah Nalimiah, Beruwala, Sri Lanka.
11. Sirima Kiribamuna, "Muslim and the trade of the Arabian sea with special references to Sri Lanka from birth of Islam to the 15$^{th}$ century": **Muslims of Sri Lanka.**
12. Winsted, F.O., (edit), 1909, Cosmas Indicopleustes , **The Christian Topography,** Oxport University Press.